# சைவ சித்தாந்த கருத்துப் பரவலாக்கத்தில் ஈழத்தவரின் இலக்கிய முயற்சிகள்: நமசிவாயம் அல்லது நான் யார் நூலை முன்வைத்து

# The Literary Efforts of the Sri Lankan's in the Dissemination of Saiva Siddhanta Concept: Presenting Namasivayam or Nan Yaar

சின்னராஜா ரமணராஜா / Sinnarajah Ramanarajah[1]

**Abstract**

Based on the book Namasivayam or Nan Yaar, this research aims to identify the literary efforts of the Sri Lankan's in propagating the Saiva Siddhanta concept. The true vision of Saiva Siddhanta is Found in Jaffna culture, where Saiva Siddhanta is seen as the traditional culture of Jaffna people. This philosophy has evolved into the intellectual thoughts of the Saivite Tamil Society and is integrated into people's lives. Since the time of Arumuga Navalar, various activities have been undertaken to disseminate the Saiva Siddhanta concept. These philosophical concepts were carried to the society in different forms such as speeches and writings. The book Namasivayam or Nan Yaar which is the focus of this research contains a Saiva Siddhanta we have research here has tried to disseminate saiva siddhanta Philosophy as its core and serves as an artistic form for propagating this philosophy. Consequently, this research is conducted using a descriptive literature research methodology.

Date of submission: 2024-11-18
Date of acceptance: 2024-12-01
Date of Publication: 2024-12-30
Corresponding author's Name:
*Sinnarajah Ramanarajah*
Email: sramanaa@univ.jfn.ac.lk

**Keywords:** Saiva Siddhanta, Jaffna Culture, Namasivayam or Nan Yaar, Drama Form, Saiva Leterature

## அறிமுகம்

காலனி ஆதிக்கமும் அதன் சுரண்டல் போக்குகளும் யாழ்ப்பாணத்தில் நவீனமயமாதல், நகரமயமாதல், தாராளமயமாதல் என பலவற்றைத் தோற்றுவித்தன. மேற்குலக நாடுகள் தமது காலனித்துவ ஆட்சி அதிகாரத்தின் ஊடாகத் தாம் கையகப்படுத்திய நாடுகளைப் பயன்படுத்தி பெருமூலதனத் திரட்டலைப் பெறுவதில் ஆர்வமும் முனைப்பும் கொண்டிருந்தன. இங்குள்ள பெருவளங்களைத் துணைக்கொண்டு தமது நாடுகளில் தொழில் வளத்தையும், சமூகத்தையும் வளப்படுத்துவதனை இலக்காக வும் கொண்டிருந்தன. கீழைத் தேய நாடுகள் பலவும் காலனித்துவ சக்திகளின் பொருளாதார சுரண்டலுக்கு உள்ளானதோடு அவற்றின் விற்பனை மையங்களாகவும் மாறின.

கி.பி. 16ஆம் நூற்றாண்டளவில் ஈழத்தின் காலனி ஆதிக்கத்தின் வரலாறு ஆரம்பித்தது. இதனியங்கியல் போர்த்துக்கேயர்கள், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்கள் எனத் தொடர்ச்சியாக 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை நடந்தேறியது. எனவே காலனியக காலகட்டத்தில்

[1]The author is a Senior Lecturer, Department of Hindu Civilization, Faculty of Hindu Studies, University of Jaffna. sramanaa@univ.jfn.ac.lk

ஈழத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த மக்கள் வாழ்வாதாரத்திற்காகவும் பொருளாதார மேம்பாட்டிற்காகவும் கல்வி விருத்திக்காகவும் பண்பாட்டு மீட்டெடுப்புக்காகவும்காலனியாக்கர்களுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் எதிர்வினை யாற்ற வேண்டிய சூழல் காணப்பட்டது.

யாழ்ப்பாணத் தமிழர்களின் வாழ்வியல் என்பது இந்தியப்பண் பாட்டின் வலைகளால் பின்னப்பட்டிருக்கின்றது. அங்கு கருக்கொண்டு உருப்பெற்று முடிவு கண்டிருந்த 'சைவ சித்தாந்தம்' யாழ்ப்பாணத்து மக்களின் பண்பாட்டு வாழ்வியலில் அதிகளவு செல்வாக்குப் பெற்றிருந்தது. வேத ஆகமங்களையும் தோத்திர சாஸ்திரங்களையும் மூலகங்க ளாகக் கொண்டு சோழர்காலப் பின் எல்லையில் சைவ சித்தாந்தம் முடிவு பெற்றிருந்தது. தமிழர் தத்துவமாகவும் வாழ்வியலாகவும் செல்வாக்குப் பெற்று பெரும் தத்துவமாக சைவ சித்தாந்தம் திகழ்வதா யிற்று.

காலனியாக்கச் சூழலில் சைவ சித்தாந்தக் கருத்துக்களை மக்களிடையே எடுத்துச் செல்ல வேண்டும் என்பதில் முனைப்புக் கொண்டிருந்த அறிவர்கள், அதற்கான உபாயங்களை வகுத்துக் கொண்டனர். அதனை எவ்வளவு எளிமைப்படுத்த இயலுமோ அதற்கான செயலூக் கங்களை மேற் கொண்டிருந் தனர். பேருரை, பதவுரை, அரும் பதவுரை, பொழிப்புரை என மெய்கண்ட சாஸ்திரங்களை சமூகமயப்படுத்துவதற்கான முயற்சிகள் நிகழ்ந்தன. மேலும், பிரசாரங்கள், கல்வி அளிப்புகள், போதனைகள், சொற்பொழிவுகள் என பன்முகத்தன்மைகளில் சைவ சித்தாந்த தத்துவக் கருத்துக்கள் மக்களிடத்தில் எடுத்துச் செல்லப் பட்டன.

நாம் இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட நமசிவாயம் என்னும் நான் யார் 1929 ஆண்டு; வித்துவான் க. இராமலிங்கம் அவர்களால் எழுதப்பட்டது. சைவ சித்தாந்த சமூகப் பண்பாட்டு வாழ்வியலை மையப்படுத்திய கதையினை இந்நூல் பேசு பொருளாகக் கொண்டுள்ளது. க. இராமலிங்கம் சைவ சித்தாந்த தத்துவத்தின் மீதான தனது அறிவுப்புலமை சார் அனுபவத் தின் அடிப்படையில் இந்நாடக நூலை இயற்றியுள்ளார். எழுத்துரு வோடு மட்டுமன்றி மக்கள் முன்னிலையில் நாடகமாகவும் அரங்கேற்றப்பட்டிருக்கின்றது.

> "அடியேன் கல்வித் திறமையினா லாவது ஞான முதிர்ச்சியினா லாவது இந்நாடகத்தை எழுத முயன்றவனல் லன். அரிசியும் வசம்பும் விற்ற ஒருவன் வீதிகள் தோறும் சென்று 'அரிசிவசம்பு' என கூவித்திரிந்தமை யினால் ஆன்ம ஞானத்தை அடைந்தான் என்பர். அங்கனமே அடியேனும், இதை வாசிக்கும் சகோதர சகோதரிகளும் பஞ்ச கிருத்திய கர்த்தாவாகிய பஞ்சாட்சர சொரூ பியின் திருவருளைப் பெற்றுக் கடைந்தேறுமாறு அவருடைய பரிக்கிர சக்திகளின் திருநாமங் களை இடைப் பெய்து எழுதலா னன்"

என்று முகவுரையில் நூலாசிரியர் குறித்துள்ளார். இந்நூல் விநாயகர் துதி, சரஸ்வதி துதி எனும் இரு கடவுள் துதிகளோடும் நூற்பயன், அவையடக்கம், தேவாரம் என்னும் அம்சங்களோடும் தொடங்குகின் றது.

> "....ஒருவரம் வேண்டுவேன் யான் தன்னை அறிந்து தலைவனை மேவத்தகு மொரு நூல்..."

என சரஸ்வதி துதியில் வரும் பாடலடிகளில், தலைவனாகிய சிவனை அடையத் தன்னிலை அறிதலின் அவசியம் எடுத்துரைப் பதாக உள்ளது. நாடகத்தின் உட்கிடையினை மேற்போந்த அடிகள் தெரிவிக்கின்றன. 'இச் சரித உட்பொருளை எட்டுணை உணர்ந்தோர் இச்சையுடன் மெச்சி நடமிட்டவர்கள் யாரும் நிச்சயமதாய்ப் பெறுவர் நீதி தப்பார்' என நூலாசிரியர் நூற்பயன் குறித்து அறிவிக்கின் றார். இதன் மூலம் நூலாசிரியர் சைவ சித்தாந்தத்தின் மீது கொண்டுள்ள பற்றும் புலமைத் துவமும் வெளிப்படுகின்றது. மேலுமவர்,

> "கற்றறியாப் பேதையேன் காசினியிலிக் கதையை சிற்றறி வினாலெடுத்துச் செப்பினேன்..."

என அவையடக்கத்தில் தெரிவிப் பதும் எம்கவனம் பெறுகின்றது.

**பதிப்பு**

ஈழத்துச் சமயப் பண்பாட்டு மெய்யியல் மற்றும் கலையியல் வரலாற்றில் நீக்கமற நிறைந் திருக்கும் இலக்கியங்களில் நமசிவாயம் அல்லது நான் யார் எனும் ஓர் நவீன நாடகநூலும் உள்ளடங்குகின்றது. சமூக மட்டத்தில் சைவ சித்தாந்த மெய்யியலை நாடகப் பாங்கில் பரப்புரை செய்யும் நூல் வடிவமாக இந்நூலுள்ளது. 1929ஆம் ஆண்டு கொழும்பு மெய் கண்டான் அச்சகத்தினரால் முதன் முதலில் பதிப்புச் செய்யப் பட்டது. சுமார் ஒரு நூற்றாண்டை அண்மித்த காலச்சூழலில் இன்று அதன் மறுபதிப்பின் தேவை உணரப்பட்டிருக்கின்றது. 2023ஆம் ஆண்டு இந்நூலின் ஆசிரியர் க.இராமலிங்கம் அவர்களால் உருவாக்கப்பட்ட மட்டுவில் கமலாசனி வித்தியாசாலையின் பரிசளிப்பு நாளுக்கு நினைவுப் பேருரைக்காக அழைக்கப்பட்ட பேராசிரியர் ச.முகுந்தனின் வரலாற்றியல் நோக்கிலான அணுகுமுறை இந்நூலின் இருப்பினை உறுதிப்படுத்தியதோடு அதனைக் கண்டறிவதற்கான தேடலையும் விரைவுபடுத்தியது. ஒருவருட காலமாக நிகழ்ந்த இவ்வரிய பணி இந்நூலை பொதுவெளிச்சத்திற்கு கொண்டு வந்துள்ளது.

கமலாசனி வித்தியாசாலையின் பழைய மாணவர்கள் இந்நூலை பதிப்புச் செய்வதற்கான அனுசரணையினை வழங்கி இருந்தனர். பல நூல்களின் ஆசிரியரும், யாழ்ப்பாண வைபவம், சிதம்பர மான்மியம், யாழ்ப்பாணச் சமய நிலை ஆகியனவற்றை விமர்சன ரீதியான பதிப்புரைகளோடு மீள்பதிப்புச் செய்தவருமான பேராசிரியர் ச. முகுந்தன் இந்நூலின் பதிப்பாசிரியர் ஆவார்.

"இந்நாடக நூல் அதன் பொருண்மை நிலையில் தத்துவார்த்தக் குறியீட்டு நாடகப் பனுவலாக அமைந்துள்ளது. அந்த வகையில் சைவ சித்தாந்த மெய்யியலையும் அதுசார்ந்த வாழ்விய லையும் அக்கால சமூகத்தினருக்கு தேனில் செறித்து ஊட்டப்படும் ஔடதம் போலத் தரும் வகையில் இந்நூல் அமையப் பெற்றுள்ளது."

என நூலின் தன்மையினை பதிப்பாசிரியர் வெளிப்படுத்துகின்றார்.

வைதிக நெறிசார் வாழ்வியல் ஊடாட்டம் வேதங்களை முன்னிறுத்தியதாகவே காணப்படுகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டு தத்துவவியல் விவாதிப்புகள் காலம்தோறும் இடம்பெற்று வந்திருக்கின்றன. தத்துவவியியல் சிந்தனைகளை முன்வைப்பதும் அவற்றைச் சமூக மயப்படுத்து வதற்கான உபாயங்களைக் கொண்டி ருப்பதும் மெய்யியலாளர்களின் கொள்கை வகுப்பாகும்.

இந்நூலின் பதிப்பாசிரியர், தத்துவக் கருத்தியல் பொதிந்த நாடகப் பிரதிகளை வரலாற்றியல் ரீதியாக முன்வைத்திருப்பது கவனிக்கத்தக்கது. 'சமய தத்துவக் கருத்தியல்களை கதைக்களத்தில் மோதவிட்ட சந்தர்ப்பங்களை தமிழ் இலக்கி யப் பரப்பில் மணிமேக லையில் முதல் முதலில் அடையாளம் காண முடிகிறது' என கூறும் பதிப்பாசிரியர், மத்தவிலாசப் பிரகசனம், பிரபோத சந்திரோ தயம் (அத்வைதக் கொள்கையை சமூக மயப் படுத்தும் நாடக நூல்), சங்கல்ப சூர்யோதயம் (விசிட்டாத் வைதக் கொள்கையை விளக்கும் நாடகநூல்), உபயக் ராஸராஹீ தயம் (துவைத வேதாந்த கொள்கையை விளக்குவது) மற்றும் மெய்ஞ்ஞான விளக்கம் முதலான நாடகப் பிரதியாக்கங் களையும் பட்டியற்படுத்தி உள்ளார். 16ஆம் நூற்றாண்ட ளவில் மாதை திருவேங்கட சுவாமிகள் தமிழில் இயற்றிய 'மெய்ஞான விளக்கம்' என்பது வித்துவான் க.இராமலிங்கம் பிள்ளைக்கு முன்னோடிச் சிந்தனைகளை வழங்கி இருக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

இலங்கையின் வடபுலத்தில் வாழ்ந்த புலமையாளர்கள் சைவ சித்தாந்த மெய்யியலை சமூக மயப்படுத்துவதற்கான அடிப்படைகளைப் பன்முக வடிவங் களில் முன்னெடுத்திருந்தனர். ஆறுமுக நாவலரின் சைவ வினாவிடை, சிவாலய தரிசன விதி, காசிவாசி செந்திநாதையரின் சிவஞானபோத வசனலங்காரதீபம், மு. கந்தையாவின் சிவஞானசித்தித் திறவுகோல் என்பன சில எடுத்துக்காட்டுகளாகும். ஆனால் இதிலிருந்து வேறுபட்டு சைவ சித்தாந்த

மெய்யியலை கலை வடிவமாக்கி மக்கள் மயப்படுத்தும் தத்துவார்த்த நாடகப் பிரதியாக்க முயற்சிகளும் ஈழத்தில் இடம் பெற்றிருந்தமைக்கு நமசிவாயம் அல்லது நான் யார் என்னும் நூல் நல்ல திருட்டாந்தமாகும்.

இப்பதிப்பில்சை வசித்தாந்த தத்துவக் கருத்தியலை நாடக வடிவமாக்கிய ஈழத்தவர்களுள் முக்கியமாக மூவர் குறித்து வரலாற்றுரீதியாக அணுகப் பட்டிருக்கின்றது. ஒருவர் சேர். முத்துக்குமாரசுவாமி. இவர் சைவம், சைவ சித்தாந்த தத்துவம் சார்ந்து புலமைத்துவ ரீதியாக ஆய்வுரைகளைச் செய்திருப்பவர். அரிச்சந்திரன் நாடகத்தை ஆங்கிலத்தில் நாடகப் பிரதியாக்கி 1864இல் விக்டோரியா மகாராணி முன்னிலையில் ஆற்றுப்படுத்தி இருந்தார். மற்றை யவர், நவாலியூர் சோமசுந்தரப் புலவர். இவரது 'உயிரிளங்குமரன் சைவ சித்தாந்த உட்பொருளை பாத்திரப் பிரதிகள் ஊடாக வெளிப்படுத்திய நூலாக உள்ளது. ஆய்வாளர்களும் நாடக ஆசிரியர் களும் 'உயிரிளங் குமரனை' இனங்கண்டு கொண்டுள்ளமைபோல நமசிவாயம் அல்லது நான் யார் எனும் நூலை யாரும் கண்டு கொள்ளவில்லை என்று தமது ஆதங்கத்தை தெரிவிக்கும் பதிப்பாசிரியர், இந்த நூலை பதிப்பு செய்து வெளியிடுவதில் தான் சந்தித்த இன்னல்களை தெரிவித்திருக்கின்றார்.

### நமசிவாயம் அல்லது நான் யார் நூல் நுவலும் பொருளும் சிறப்பு களும்

சைவத்தமிழ் சமூகத்தின் அறிவார்ந்த சிந்தனைகளாக வளர்ந்த சைவ சித்தாந்த தத்துவம், மக்கள் வாழ்வியலாக இணைந்து கொண்டது. மெய்யியலும் வாழ்வியலும் ஒருமுகமானவை என்பதனைப் புரிந்து கொள்வதற்கு சைவ சித்தாந்த வாழ்வியல் துணை புரியும். சைவ சித்தாந்த தத்துவத்தின் இன்றியமையாக் கூறுகளை நாடகப் பிரதி ஊடாக மக்கள் மையப்படுத்துவதற்காக எடுத்த முயற்சியே நமசிவாயம் அல்லது நான் யார் எனும் நூலுக்கான அடிப்படையை வழங்கி இருக்கின்றது.

இந்நூலினை இலகுவில் விளங்கிக் கொள்வதெனின், தமிழறிவு நாடக அறிவு, சைவசித்தாந்த மெய்யியல் அறிவு எனும் முத்திறனறிவு நிரம்பப் பெற்றிருத்தல் வேண்டும். இது நூலாசிரியரின் புலமைத்துவத் திற்குக் கட்டியம் கூறுவதாக உள்ளது.

நாடகம் என்பது அறிவுப் பரவுகைக்கான - அறிவுக் கையளிப்புக்கான ஒரு ஊடகமாகத் திகழும் கலைவடிவமாகும். கதை தழுவி வரும் கூத்தே நாடகமாகும் என்கிறார் விபுலானந்தர். இன்றைய காலத்தினைப் போலல்லாது வலுவான ஊடகங்கள், இணையத்தள சாதனங்கள், நூல்கள், செய்தித் தாள்கள் என்பன பிரபலம் இல்லாத அன்றைய காலச் சூழலில் மக்களுக்கான அறிவுக் கையளிப்புச் செயற்பாடு நாடகம் என்னும் கலை வடிவத்தின் ஊடாகவே மேற்கொள்ளப்பட்டது. சைவத்தமிழ்ச் சமூகத்தின் அறிவார்ந்த தத்துவக் கோட்பாடாக இருந்த சைவ சித்தாந்த மெய்யியலை மக்களிடத்தில் எடுத்துச் செல்ல முற்பட்ட உயிரிளங்குமரன், நமசிவாயம் அல்லது நான் யார் எனும் இரு நாடக நூல்களும் ஒரே நூற்றாண்டைச் சேர்ந்தன. ஆயினும் நமசிவாயம் அல்லது நான் யார் எனும் நூல் உயிரிளங்குமரனுக்கு காலத்தால் சில ஆண்டுகள் முற்பட்டதாகவே திகழ்கின்றது.

சைவ தத்துவத்தின் நுண்ணார்ந்த சிந்தனைத் தடங்கள் காலம் தோறும் இலகுவான சாவி கொண்டு திறக்கப்படுவதற்கான முயற்சிகள் இடம்பெற்று வந்த சூழலில் நாடக வடிவத்தின் ஊடாக எளிமையாக்கி பாத்திரக் குறியீடுகளால் இலகுபடுத்தி சமூக மயப்படுத்தும் இந்நூன்முயற்சி மெய்ச்சத் தகுந்தது. அதுவே இந்நூலுக்கான சிறப்பு எனவும் நோக்கப்படுகின்றது.

சான்றவர் ஆய்ந்திடத் தக்க பொருள்கள் ஆவன இறைவன், உயிர் பிரபஞ்சமாகும். பேரறிவு டைய இறைவன் பிரபஞ்சப் பற்றற்ற இயல்புடையவன். ஆனால் உயிர்கள் தமது சிற்றறிவுக்கு ஏற்ப சிறு தொழில்களை ஆற்றவல்லன. சிற்றறிவும் அவற்றால் விளையும் செயல்களும் உயிர்களுக்கான உய்தியினை – விடுதலையினை அடைய முடியாதபடி செய்து விடுகின்றன. அதாவது, பிரபஞ்சப் பற்றானது பேரறிவுடைய இறைவனை அடைய

உயிர்களுக்குத் தடையாக அமைகின்றது. இத்தடைகளில் இருந்து நீங்க வேண்டுமெனில் உயிர்கள் 'தம்மை அறிய' வேண்டும். 'தன்னை அறிய தமக்கோர் கேடில்லை' என்கிறார் திருமூலர். 'தன்னை அறிய வேணும் சாராமல் சார வேணும் பின்னை அறிவதெல்லாம் பேயறி வாகும்'', என்கிறார் குதம்பைச் சித்தர். எனவே, பரம சுகத்தை அடைய 'தன்னைத் தானறிதல்' வேண்டும். இதுவே 'நான் யார்' எனும் ஞான விசாரமாகும். நான் யார் எனில், கன்மந்திரியம், ஞானந்திரியம், மனம், புத்தி, சித்தம் அகங்காரம், பிராணன் எதுவுமன்று. இதற்கு வேறாக தனித்து நிற்கும் அறிவே நான் என்பதாகும். (ரமண மகரிஷி, 2017, ப.1)

இந்த அடிப்படையில் நான் யார் அல்லது நமசிவாயம் எனும் ஓர் நவீன நாடகத்தினை அணுக வேண்டும். நமசிவாயம் என்பது ஆன்மாவின் பெயராகும். இவ்வான்மாவே இந்த நாடகத்தின் மையப் பாத்திரம் ஆகும். இதனைவிட இன்னும் பத்தொன்பது (மொத்தம் 20) கதாபாத்திரங்கள் ஊடாக இந்நாடகம் கட்டமைக்கப்பட்டிருக்கின்றது. ஒர் ஆன்மாவின் இலட்சியம் உலகப் பற்றறுத்து அதனின்றும் விடுபடுதலே ஆகும். இச்செயல்பாட்டில் ஆத்மனுக்கு ஏற்படும் அனுபவங்கள் எவை? அதனால் அவன் அடையும் துன்பங்கள் எவை? பஞ்சப்புலன்களால் அலைப்பு உண்டாகும் நிலை என்ன? ஆணவம், கன்மம் முதலான மலங்கள் எவ்வாறு அந்த ஆத்மாவுடன் தொடர்பு கொள்கின் றன? இதற்குள் சிக்கித் தவிக்கும் ஆன்மாவின் பரிதவிப்பு எத்தகையது? என்பது பற்றியே இந்த நாடகம் தெளிவுபடுத்த முனைகின்றது.

பிரதானபாத்திரம் - நமசிவாயம், நமசிவாயத்தின் இலட்சியம் - ஈடேற்றம், ஈடேறும் கதைக்களம் - மாயாபுரம், மாயாபுரம் என்பது - பிரகிருதி மாயையில் இருந்து விரிந்த உலகம், ஆன்மாவை அழுத்தி வைத்திருக்கும் திரோதான சக்தி – மன மோகனன், மனமோகனனன் சேவகன் - ஆசைப்பிள்ளை, ஆசைப்பிள்ளை - ஆணவம், ஆகாமியன் - கன்மம், பஞ்சகிருத்திய நாயகர் - ஆன்மாக்களை கன்மத் தளைகளில் இருந்து விடுபட்டு ஈடேற வழிகாட்டும் இறைவன் (பதிப்பொருள்), பதிப்பொருள் - ஆன்ம நாயகன் (உயிர்களின் தலைவன்) என பாத்திரங்கள் படைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு இந்நாடகத்தில் வருகின்ற கதாபாத்திரங்கள் ஒவ்வொன்றும் சைவ சித்தாந்த தத்துவக்; கருத்தியல்களுடன் தொடர்புறு வனவாகவும், ஆன்மாவின் (நமசிவாயம்) இலட்சியப் பயணத்தில் இடைவினை புரிவனவாகவும் உருவாக்கப்பட்டுள்ளமை காணுதற்குரியது. இதன் நிமித்தம் இந்நூலாசிரியர் குறிப்பிடும் கதை நிகழும் இடம் மற்றும் நாடகப் பாத்திரங்கள் பற்றி பின்வருமாறு நோக்கலாம்.

கதை நிகழும் இடம்: மாயாபுரம் என்னும் தேசத்திலே சாவாங் கோட்டை எனும் ஊரும் தபோவனமும்

நாடகப் பாத்திரங்கள்

1. ஆன்மநாயகன் (பஞ்சகிருத்திய கர்த்தர்) ஏக சக்கராதிபதி
2. சகலகலாநந்தர் - (தெட்சிணா மூர்த்தி) குரு
3. சதாசிவம் (ஆண்டான்) சிவக் கொழுந்துவை வளர்த்தவர்.
4. அறிவானந்தர் (சிவஞானம்) இளவரசன் நீதிபதி
5. சற்புத்தி(அருட்சத்தி) நமசிவாயத்தின் நண்பன்
6. மனமோகனன் (திரோதானம்) மந்திரி
7. நமசிவாயம் (ஆன்மா) மனமோகனன் புதல்வன்
8. ரசோகுணன் (ரசோகுணம்) மனமோகனன் தத்துவ புத்திரன்
9. தமோகுணன் (தமோகுணம்) மனமோகனன் தத்துப் புத்திரன்
10. விவேகானந்தர் (காலதத்துவம்) கல்யாணப் பதிவுகாரர்
11. சித்தம்பலம் (நியதி தத்துவம்) காவலர்
12. அருளம்பலம் (நியதி தத்துவம்) காவலர்

13. ஆசைப்பிள்ளை (ஆணவம்) மனமோகனன் சேவகன்.

14. ஆகாமியன் (கன்மம்) மன மோகனன் சேவகன்

15. ஆனந்தன் (சிவானந்தம்); ஆன்ம நாதரின் ஆசார வாயிற் காவலன்

16. கருணாம்பாள் (சிவ நேசம்) அறிவானந்தர் மனைவி

17. லோகசுந்தரம் (பசு ஞானம்) அறிவானந்தர் புதல்வி

18. ஞானசுந்தரம் (பதிஞானம்) அறிவானந்தர் புதல்வி

19. சாந்த வசனி (சாத்துவித குணம்) மனமோகனன் மனைவி

20. சிரத்தை (சிரத்தை) ரசோகுணன் காமக்கிழத்தி (சிவக் கொழுந்து நமசிவாயத்தின் தீக்சா நாமம்)

என்பன இந்நாடகத்தின் பாத்திரப் படைப்புகளாகும். இவற்றுள் சிவநேசம், பசுஞானம், பதி ஞானம், சாத்துவித குணம், சிரத்தை முறையே கருணாம் பாள், லோகசுந்தரம், ஞான சுந்தரம், சாந்தவசனி, சிரத்தை என பெண்பால் பாத்திரங்களாகவும் ஏனையவை ஆண்பால் பாத்திரங்களாகவும் சித்தரிக்கப் பட்டுள்ளமையும் கவனத்திற்குரியது.

ஐந்து அங்கங்கள் ஊடாக கட்ட மைக்கப்பட்டுள்ள இந்நூல் 26 காட்சிகளைக் கொண்டதாக வடிவமைக்கப் பட்டுள்ளது,

முதல் அங்கம் - இரண்டு காட்சிகள்

இரண்டாம் அங்கம் - இரண்டு காட்சிகள்

மூன்றாம் அங்கம் - பதின்மூன்று காட்சிகள்

நான்காம் அங்கம் - ஏழு காட்சிகள்

ஐந்தாம் அங்கம் - இரண்டு காட்சிகள்

என மொத்தமாக 26 காட்சிகள் உள்ளன. ஒவ்வொரு காட்சியின் இறுதிப் பகுதியிலும் காட்சிகள் ஊடாக வெளிப்படுத்தப்படும் சைவ சித்தாந்த தத்துவத்தின் பொருண்மை குறித்து எடுத்துக் காட்டப்பட்டுள்ளமை நூலின் தனித்துவத்தை அளவிடத் துணை புரிகின்றது. சைவ சித்தாந்த பொருண்மையின் ஆழம், படிப்பவரால் உணரும் திறன் கொண்டது. 26 காட்சிகள் ஊடாக நூலாசிரியர் 26 விதமாக சைவ சித்தாந்த கருத்துக்களை வெளிப்படுத்தி இருக்கின்றார், அவற்றை ஈண்டு நோக்குதல் பொருத்தமுடைய தாகும்.

**முதல் அங்கம்:**

முதலாம் காட்சி – எய்துதற்கு அரியதான மானுட தேகத்தை எடுத்த ஆன்மா அதனால் எய்தும் பயனை ஆராய்ந்து அறியாது ராசத, தாமத குணங்களின் வயப்பட்டு உலகப் பற்றுக்களில் அமிழ்த்தி தீய சக்திகளை சம்பாதித்துக் கொள்கின்றது.

இரண்டாம் காட்சி - தீயகர்மங்களை பெற்றுக் கொண்ட ஆன்மா சிறிது சாத்வீக குணம் தழைப்படுதலினால் தன்னையும் தலை வனையும் அறிய வேண்டும் என்கின்ற எண்ணத்தோடு அறிவினை பெற்றுய்ய முயல்கின்றது.

**இரண்டாம் அங்கம்:**

முதலாம் காட்சி - சத்துவ குணம் தலைப்பட்டு அறிவினைச் சம்பாதிக்க முயன்ற ஆன்மா பழைய கன்மங்களினால் பின்னும் உலகியல் விடயங்களில் ஈடுபாடு கொண்டபோது அறிவும் கருணையும் அதற்கு உடன்படாது எதிர்மறுத்து நிற்கும் சமயத்திற்றான் சத்குரு வெளிவந்து சன்மார்க்க உபதேசம் செய்து அருள்வார்.

இரண்டாம் காட்சி - பக்குவம் பெற்ற ஆன்மாக்கள் பஞ்சாட்சர உபதேசம் பெற்ற வழியும் பழைய கன்மங்களினால் அதன் உண்மை உணராதவர்கள் உலகப் பற்றுக் களில் அமிழ்ந்து விடுவர் என்பதும், சத்துவ குணமும் மனமும் ஒரே வழியில் செல்வதனால் சீவகாருண்ய சீலராய், அதன் உண்மை உணர்ந்து ஜெபம், தியானம் செய்பவர்கள் தம்மை அறிந்து கொண்டு தலைவனைத் தலைப்படுவர்.

**மூன்றாம் அங்கம்:**

முதல் காட்சி - விதித்துரைக்கப்பட்டதன் வழி

பஞ்சாட்சர உபதேசம் எய்திக் கிரியா பாதத்து நிற்கின்ற ஆன்மா, காமக் குரோத முதலானவற்றால் அலைக்கழிக்கப்பட்டு, சற்புத்தி இடையிடையே தோன்ற தான் யார்? தனது சுற்றத்தவர் யார்? என அறியாது இந்த சந்தர்ப்பத்தில் கருணாநிதி ஆகிய சற்குரு வந்து ஞானோப தேசம் செய்து சதாசிவ தியானத்தில் இருத்திச் செல்வார்.

இரண்டாம் காட்சி – சிவத் தியானத்தில் இருந்த ஆன்மா பழைய கருமத்தொடர்பினால் திரோதான சக்தி தன்வழி இழுக்கவும் அப்பொழுதே திருவருட் சத்தியம் உடன் எழுந்து தன்வழி இழுத்து நல்லறிவினை உண்டாக்க குருவினை நாடி நிற்கும்.

மூன்றாம் காட்சி - ஆன்மா சிவத் தியானத்திலிருந்தும் திரோதான சக்தியின் முனைப்பினால் சதா சிவத்தை அறியாது உண்மையைத் துணியுமாறு குருவினை நாடிச் செல்லும்.

நாலாம் காட்சி - ஒரு தலை துணியப் புகுந்த ஆன்மா திரோதான சக்தி தன் வழியிழுக்கவும் அருட் சக்தியினால் நல்லறிவு அவாவி நிற்கின்றது என்பது ஞானத்தையே காட்சியால் பெறப்பட்டதாமென்க. அன்றி முழுதும் திரோதான சக்தி வசப்பட்டு உலக விவகாரத்துள் அமிழ்ந்தினோர் தாமும் கடவுளை அவாவுவார் போன்று வாணாள் வீணாகக் கழிப்பர் என்பதும் இதனால் தோன்றுமாறு உய்த் துணர்க.

ஐந்தாம் காட்சி - ஞானத்தினை அவாவி சற்புத்தி தோன்றப் பெற்ற ஆன்மா குருவின் உபதேசத்தினால் அதனை எய்தும் பொருட்டு சற்புத்தியின் வழி நிலைத்து நிற்கும்.

ஆறாம் காட்சி – திரோதான சக்தி பழைய வாசனையினால் தாமத குணத்தை எழுப்பி விடவும், அருட்சக்தி இடம் கொடாமல் விவேகத்தோடு கூடிய நல்லறி வினை உண்டாக்கி ஆன்மா வினை ஞானத்தின்கண் நிலைக்கச் செய்யும் என்பது இக்காட்சியால் பெறப்பட்டது. அன்றியும் தாமத குணத்தின் வசப்பட்ட உலக விவகாரிகள் சிலர் ஞானத்தையும் கடவுளையும் எய்துவார்போல் நடித்து தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொள்வார்கள்.

ஏழாம் காட்சி - ஞானத்தின் கண் நிலைக்க முயன்ற ஆன்மாவை முன் தாமத குணத்தினை ஏவி முனைத்த திரோதான சக்தி ராஜத குணத்தை எழுப்பிக்கொண்டு பின்னும் முனைக்கும் என்பதும் அக்குணங்கள் கெடுமாயின் தன் வலிகுன்றிவிடும்.

எட்டாம் காட்சி - மேற்கூறிய ஞானத்தின்கண் நிலைக்க முயலும் ஆன்மாவை திரோதான சக்தியின் முனைப்பினால் தாமத, ராசத குணங்கள் ஒன்று கலந்து பல முறையும் அலைக்கும்.

ஒன்பதாம் காட்சி – ஞானத்தின் கண் இளைக்கும் ஆன்மா மனை மக்களாகிய உலக விவகாரங் களில் கருணை வைக்கு மாயின் அது வழியானே தாமத குணம் எழுந்து அறிவினைக் கெடுக்க முயலும்.

பத்தாம் காட்சி – சிவத்தியான வாதிகளால் தோன்றிய ஆன்ம ஞானம், அறிவானது உலக விவகாரங்களில் எழுந்த கருணையினால் அவற்றில் அமிழ்துமாயினும் தான் கீழ்நிலையை பெற்று விடமாட்டாது.

பதினோராம் காட்சி - சதாசிவ தியானத்தினால் சிவஞானத்தை விரும்பிய ஆன்மா அதனால் தன்னையும் தலைவனையும் விரைந்து தலைப்படாதவாறு உலக வியவகாரம் பற்றுக் கோடாக ராசத, தாமத குணங்கள் ஒருங்கே எழுந்து பலவாறு அழைக்க முயலும்.

பன்னிரண்டாம் காட்சி – சிவ ஞானத்தையே அடைய வேண்டும் என்னும் சற்புத்தி கைவரப் பெற்ற ஆன்மாவை அப்புத்தி ஒழியும் தோறும் ராசத தாமத குணங்கள் வெளிவந்து கெடுக்க முயலும். ஆயினும் சதாசிவ தியானத்தின் பலனாக பரமசிவன் வெளிவந்து ஆட்கொண்டு அருளுவார்.

பதின்மூன்றாம் காட்சி – சிவத் தியானத்தினால் ஞானத்தினைப் பெற நின்ற ஆன்மாவுக்குச் சிறிது உலக வாசனை இருக்குமாயின் தாமத, ராசத குணங்கள் எழுந்து ஞானத்தைத் தடுக்க முயலும். அன்றியும் ராசத, தாமத குணங்களின் வசப்பட்டு உழலும் சிலர் ஞானத்தை எய்தும் வழிவகை அறியாது அதனை எய்துவதற்குரிய சத்துவ குணம் தலைப்பட்டவர் போல நடிப்பர்.

**நான்காம் அங்கம்:**

முதலாம் காட்சி – சிவத் தியானம் உள்ள ஆன்மாவுக்கு உலகப்பற்று நீடிக்குமாயின் அதனூடாக தாமத குணம் எழுந்து காம குரோதங்களை எழுப்பி அஞ்ஞானத்தை அழிக்க முயலும் என்பதும், தாமத குணத்தின் வசப்பட்டு குரோதி குணங்களை நயந்து கொண்ட அறிவிலிகள் சிலர் "இந்தச் செயலினால் வரும் பகை எல்லாம் சிவன் செயலன்றி, அந்தகனால் மென்ற மூடர்கள் அதோ கதி அடைவர்" என்னும் சுருதியின் உணராது தம்மனம் போனவாறு போய் ஞானத்தை அறிந்தார் போல தனிமை எய்தி இறுமாந்திருப்பினும் அதனை அடைய மாட்டார் என்பதும் ஞானத்தை எய்துவேன் எய்தி னேன் என்ற என்ன மாத்திரை யானே சிறிது பயனுறுவர்.

இரண்டாம் காட்சி - எந்நேரமும் சிவத் தியானத்தில் இருந்த ஆன்மா உலக விவகாரந்தடிக்குமாயின் காம குரோதிகளில் அமிழ்ந்து விடும். பின் சிவத் தியானத்தின் பயனாக அறிவினைப் பெற முயலும். அவ்வாறு முயலுமிடத்து அந்த வாசனையினால் ஐம்புல நுகர்ச்சியும் ஞானம் என தான் அடையும் பொருள் என்று தோன்றக்கூடும். அங்ஙனம் தோன்றுமாயின் தாமத குணம் என்பதும், தாமத குணம் உடையார் ஞானம் என அடைவது ஐம்புலன் தம்வசப்படுத்தல் நுகர்ச்சியாம் என்பதும் உண்மை. ஞான அறிவு தாமத குணத்தினை விலக்கி சத்துவ குணத்தோடு கூடி நின்று பஞ்சேந்திரியங்களையும் விடயங்களில் செல்லாமல் சும்மா நில் என நிற்கும்.

மூன்றாம் காட்சி - குருவினை அவாவிய ஆன்மாவுக்கு அதன் அறிவு உலக விடயத்திலும் ஞானவழியினும் ஒப்பச் செல்லும் ஆயின் விடயத்தைக் கொண்டு எழுந்த சித்த அகங்காரங்கள் ஒருவழிப்படாது இடையூறு விளைவிக்கும் என்பதால் ஆன்மா உண்மையாகவே ஞான நெறியை அவாவிய வழி உலகப் பற்றினை வெறுக்குமாயின் அது கைகூடும். உலகப்பற்றை வெறுத்து ஒழிக்கும் ஆற்றல் இன்றி இவ்வான்மா கொடுத்து வைக்கவில்லை என்று கவர்படும் நெறியினின்று என்று கூறுபவர்களின் கூற்றுப் பொருந்தாது.

நான்காம் காட்சி – சிவத்தியானம் எய்திய ஆன்மா உலக வியவ காரியங்களைக் கண்டு கழித்துச் சற்புத்தி வழிநின்று ஞானத்தினை அவாவும் என்பதும் "கெடுவாய் கேடு நினையத் தானே வருங்கேடு" என்பதும் இதனால் தோன்றும்.

ஐந்தாம் காட்சி - குருவாக்கிய பரிபாலனம் செய்துவரும் பிடிவாதம் உள்ள மனசுக்கு ஞான வழி இது, லௌகீக வழி இது எனும் ஆராய்ச்சி இல்லாது ஒளியினும் ஞானம் தானே உதயமாகி அதனை ஒருவழிப்படுத்தி நல்லறிவை எய்தச் செய்யும்.

ஆறாம் காட்சி - பஞ்ச இந்திரியங்கள் விடய நுகர்ச்சிகளை இழுக்கவும் சிவ தியானாதிகளினால் அவ்விடயங்களின் இயல்பினை உணர்ந்து வெறுத்து ஞானத்தை அவாவிய ஆன்மாவுக்கு பசுகரண இயல்பு மாறி பதிகரணமாகும்.

ஏழாம் காட்சி – சத்தினிபாதம் எய்திய ஆன்மாவுக்கு பஞ்ச இந்திரியங்களும் தம்வலி குன்றி நல்லறிவினை நாடிச் செல்லும். சித்த அகங்காரங்கள் பசுத்துவம் நீங்கி அதனை பதிவிடத்து வலிந்திழுத்துச் செல்லும் என்பதும் இதனால் பெறப்பட்டன.

**ஐந்தாம் அங்கம்:**

முதலாம் காட்சி - பசு கரணங்கள் எல்லாம் பதி கரணங்கள் ஆகும். இயல்புடைய ஆன்மா, குரு சந்நிதியை அடைய அக்குரு, அறிவு கருணை என்பவற்றின் வழியில் செலுத்த அவ்வழி யாலே சென்று ஞானத்தை காட்ட கண்டு அதனால் சிவதரிசனம் எய்தி தன்வசமளித்து ஆனந்தமாக நகர்த்தி நிற்கும்.

இரண்டாம் காட்சி - சற்குருவழி நின்று ஞானமெய்திய ஆன்மா தன்னை அறிந்து தலைவனை மேவும்.

இவ்வாறாக ஒவ்வொரு காட்சி அமைப்பு முடிவிலும் சைவ சித்தாந்த கருத்தியல் சாரமாகத் தரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், சில காட்சி அமைப்புகள் இடையே பல்வேறு இராக - தாளங்களை முன்வைத்து

பல்லவி, அனுபல்லவி, சரணம் எனும் வகையில் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. அத்தகைய பாடல்கள் ஒவ்வொன்றும் தத்துவ நுட்பம் செறிந்தனவாகக் காணப்படுகின்றன. இந்துஸ்தான் காப்பி, காப்பி, காம்போதி, ஆனந்த பைரவி, சமாசு, எதுகுல காம்போதி, சண்முகப்பிரியா, உசேனி, பெலகிரி, தேசிகதோடி, சாமா, முகாரி ஹிந்துஸ்தான் பியாக் முகாரி, சங்கராபரணம் முதலான இராகங்களும் ஆதி, ரூபம், குதி, மேகம், (கிசிர சாதி), மிஸ்ரசாதி, ஏகம், சர்வலகு, திரிபுடை (திஸ்ர சாதி), திரிபுடை முதலான தாள அமைப்புடன் கூடியனவாக அத்தகைய பாடற்காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நூலினூடு இராமலிங்கத்தின் இலக்கிய அறிவார்வத்தையும் அறிந்துணர முடிகின்றது. சைவ சித்தாந்த தத்துவத்தின் கருத்தியலைப் பாத்திரங்களினூடு நகர்த்திச் செல்லும் நூலாசிரியர் அவற்றை மேலும் விளக்குவதற்காக தேவாரம், திருவாசகம், சிவஞானபோதம், சித்தியார், உண்மை விளக்கம், திருமந்திரம், தாயுமானவர் பாடல்கள், திருவாதவூர் புராணம், சிவஞான தீபம், சித்தாந்தக்கானம், திருக் குறள், காஞ்சி புராணம், திரு விளையாடல் புராணம், இராமாயணம் என இலக்கியங்களைப் பயன்படுத்துகின்ற நூலாசிரியரின் புலமைத்துவம் இதன்மூலம் இனங்கண்டறியப் படுகின்றது.

பாத்திரங்களூடான உரையாடல் மெய்கண்ட சாஸ்திரங்களை நினைவுபடுத்து கின்றன. சைவ சித்தாந்தம் முப்பொருள் உண்மையை நிறுவுவதாய் அமைந்தாலும் இங்கு ஆன்மா தொடர்பான இருப்பு, இயல்புகள், இலக்கு, இலக்குக்கான மார்க்கங் களே பாத்திரப்படைப்புகள் ஊடாக வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஆன்மாக்கள் பொதுவாக தாமத, ராசத, மற்றும் சத்துவ குணங்களை உடையவை. முதலிரு குணங்களும் இலவுகீக வாழ்வியலுக்குள் ஆன்மாக்களை இலயிக்கச் செய்யும் ஆற்றல் உடையவை. முதல் அரங்கத்தின் முதல் காட்சியில் ரசோகுணனும் (ராட்சத குணம்), தமோகுணனும் (தாமத குணம்) உரையாடி வருவதாக சித்தரிக்கப்பட்டிருக் கிறது. அந்த உரையாடல் பின்வருமாறு அமைவதனைக் கண்ணுறலாம்.

ரசகுணன்: தம்பி நமதெண்ணம் எவ்வாறு ஆகுமோ அறியேன்.

தமோகுணன்: ஆசைப் பிள்ளையும் ஆகாமியனும் சாமானியமானவர்களா? நாம் ஏன் யோசிக்க வேண்டும்.

ரசோ: (ஆலோசித்து) சாமானியமானதென்றா நினைத்தாய் அக்குழந் தையை?

தமோ: ஏதோ ரொம்ப யோசிக்கின்றீர்களே?

ரசோ: வேண்டும் தானே

தமோ: எதற்காக?

ரசோ: அக்குழந்தையை அன்போடு வளர்த்துவரும்கால் அறிவானந்தன் அன்பு வேண்டுமானால்……

தமோ: நமக்கும் கெடுதல் உண்டு?

ரசோ : சந்தேகமா?

தமோ: (கலகலென நகைத்து) இவ்வுலகம் முழுவதையும் அடக்கியாளும் எமக்குமா?

ரசோ: ஆம் உமக்கும் எமக்கும் இன்னும்...

என உரையாடல் நீளுகின்றது. இங்கே தாமத மற்றும் இராட்சத குணங்களின் இயல்புகள், அவை ஆன்மாவை எவ்வாறு இலௌகீக உலகில் அலைப்புறச் செய்கின்றன என்பது விவரிக்கப்பட்டு, இலௌகீக வாழ்வில் ஆன்மா அனுபவிக்கும் இன்னாப்புக்கள் எடுத்துரைக்கப்படுள்ளன. இதில் இருந்து விடுபடுவதற்கு தியானம், ஜெபம் முதலான மார்க்கங்கள் உண்டு. இம்மார்க்கங்கள் ஊடாக ஆன்மா தன்னை உணர்ந்து சிவபெரும்பொருளை அடைய இயலும் என்பதே ஏனைய அரங்கக் காட்சிகள் ஊடாக விளக்கப்பட்டு உள்ளது.

இறுதியில் ஐந்தாம் அரங்கத்தின் இரண்டாம் காட்சியானது சிவக்கொழுந்துவுக்கு ஞான சுந்தரம் சாரூப்பியத்தை விளக்குவதாக அமைக்கப்பட்டுள்ளது. சிவக்கொழுந்து என்பது நமசிவாயத்தின் (ஆன்மா) தீட்சா நாமம். ஞானசுந்தரம் பதிஞானம். எனவே

இக்காட்சியினூடே இறை - ஆன்ம தொடர்பு தெளிவுறுத்தப் பட்டிருக் கிறது. அவ்வுரையாடல் பின்வருமாறு,

*சிவ: பிராண சகி! நான் யார் என்றும், என் தாய் தந்தையர் யார் என்றும், இம்மானுட ஜென்மத்தின் விசேடம் இன்னதென்றும் அதனால் அடையும் பேறு என்னவென்றும் நீயே எனக்கு தெரிவிப்பாய். என எம் குருநாதர் கூறியிருந்தார். அவற்றைத் தெரிவிப்பாய். (இது நமசிவாய ஆகிய ஆன்மா வின் வேண்டுகோள்.)*

*ஞான: பிராணேச! தாம் தூல சூக்குமமாதலால் சிவக் கொழுந்து என்றும், மலபந்த முடைமையால் ஆன்மா என்றும், ஆன்ம நாதரின் பஞ்சகிருத்திய கடாட்சத்தை பெறுதலால் நமசிவாயம் என்றும் அழைக்கப்பட்டு வந்தீர்கள்.*

*சிவா: அப்படியா நல்லது என் தாய் தந்தையர் யாவர்?*

*ஞான: தாம் சூக்குமசித்தாகிய ஆன்ம நாதரைப்போல் அனாதி வஸ்துவாய் இருந்தும் சத்து, அசத்து எனும் இரண்டை யும் பற்றும், இயற்கை ஞான முடைமையால் அசத்தைப் பற்றிய குற்றத்தை நீக்கிச் சத்தைப் பற்றுதலாகிய நித்தியானந்தத்தை கொடுத் தருளும் ஆன்ம நாயகர் தமது பஞ்சகிருத்திய பரிக்கிரகம் எடுத்துக் கொண்ட சுத்தா சுத்த மாயா காரியதரிசிகளால் பரிபக்குவப்படுத்தலாகிய செங்கோன் முறையை நடாத்தினர். அம்மாயா காரிய தரிசி களின் சேர்க்கையால் தான் விரும்பிய பிறவிகளை எடுத்து கன்ம தேட்ட முடையவராய் மனோராட்சி யத்திற்கு உள்ளானீர்.*

என அவ்விரு பாத்திரங்களுக்கு இடையிலான உரையாடல் அமைகின்றது. இங்கு, நமசிவா யத்தின் தாய் தந்தையர் யாவர்? என்பதற்கு ஞானசுந்தரம் கூற்றாகப் பின் வருமாறு பதில் தரப்பட்டுள்ளது.

*“...மனமே ஆசைக்கும் அவ்வாசையே பிறவிக்கும் காரணமாதலால் மன மோகனனைத் தமது பிதாவாகவும் தாம் தூய்மை உடைய சத்துவ பொருளானமையினால் மனத்தின் சுபாவ குணமாகிய சாத்வீகம் என்னும் சாந்த வசதியைத் தமது மாதாவாகவும் நன்மை தீமைகளையும் பாவ புண்ணியங்களையும் பகுத்தறிதல் கருவியான அறிவானந்தரைத் தமது மாமனாகவும், திருவருளின் காருண்ய ரூபமாகிய கருணாம்பாளை அத்தையாகவும், திரோதான சக்தியாகிய லோக சுந்தரத்தையும் அருட்சக்தியாகிய என்னையும் மைத்துனிகளாகவும் சற்புத்தியை சிநேகனாகவும், சகல கலைகளும் ஒருங்கு திரண்ட ரூபமாகிய சகலகலாநந்தரைக் குலகுருவாகவும் பெற்றுக் கொண்டீர். இத்துணைப் பெருமை தங்கிய தாம் தமது தந்தையின் பெத்த புத்திரர்களாகிய ரசோதமோ குணர்வசப்பட்டு, ஆசைப் பிள்ளை, ஆகாமியன் என்பவர்களால் அழுக்காற்றிலே போடப் பட்டீர். நித்திய வஸ்துவாதலால் அவ்வாற்றில் அமிழாது கரையேறிப் பூதங்களால் வளர்க்கப்பட்டு காமக் குரோதிகள் ஆகிய மிருகங்களுடன் வசித்தீர்கள். தம்மைக் காணாததினால் சகலரும் துக்க சாகரத்தில் அமர்ந்திருக்கும் சமயத்தில் அவர்கள் மனக் கவலையை நீக்குதல் பொருட்டாய் சகல கலானந்தர் பிரசன்னமாகி வேண்டிய புத்திகளை கூறி தம்மை தேடுதலாகிய பஞ்சாட்சர செபத் தியானத்தையும் விளக்கி அருளினார். ஆன்ம நாயகர் என்னை அழைத்து நமசிவாயம் வருகின்றான் அவனுக்கு மாலையிட்டுச் சுலோகத்தை அடைந்த நமசிவாயத்துக்கு சாமீப்பியம் கொடுத்து சாரூப்பியத்தை விளக்கி சாயுச்சியமாகிய நித்தியானந்த சம்போக சம்பன்ன னாக வாழும்படி செய்வாயென விளம்பினார்...”*

என்று குறிப்பிட்டிருக்கிறார். சிவஞானபோத எட்டாம் சூத்திரத்தினை நினைவுபடுத்து வதாக இக்காட்சி புலப்படுகின்றது.

நமசிவாய என்பது பஞ்சாட்சரம். அது இறைவன் நாமம். இந்நூலில் அது ஆன்மாவுக்கு சூட்டப்பட்டி ருக்கின்றது. ‘உள்ளிருக்கும் நாதனை உள்ளுணர்வால் அறிவதற்கு இந்நூல் தூண்டுகின்றது. உலகப் பற்றுக்களோடு இருக்கும் ஆன்மா (நமசிவாயம்) அவற்றிலிருந்து நீங்க பஞ்சாட்சர (நமசிவாய) செபத்தியானம் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இவற்றினால் குருவருள் உண்டாகும். இதனால் சத்குரு வழிநின்று ஆன்மா ஞானமெய்தும். இஞ்ஞான முடைமையினால் ஆன்மா தன்னையறிந்து

பதியாகிய பரனை தலைப்படுதலாகிய (தாடலை) பேரின்ப நிலையினைப் பெறும் என்பது இந்நூலில் தெளிவுபட விளக்கப் பட்டுள்ளது.

### முடிவுகளும் பெறுபேறுகளும்

எனவே, நமசிவாயம் அல்லது நான் யார் என்னும் ஓர் நவீன நாடகம் எனும் நூலினை வரலாற்றியல் ஆய்வு முறை, இலக்கிய விபரண ஆய்வு முறையியலினூடாக ஆராய்ந்த தன் அடிப்படையில் பின்வரும் முடிவுகளைப் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

- சைவ சித்தாந்த மெய்யியலை மக்கள் மயப்படுத்தும் சிறந்த உபாயமாகவே இந்நூல் அமைகின்றது.
- கேட்பவரை தொடர்ந்து வாசிக்கத் தூண்டும் வகையில் சைவ சித்தாந்த மெய்யியல் துலங்கள் கதாபாத்திர அமைப்பின் ஊடாக வெளிப்படுத்தப்படுகிறது.
- ஒவ்வொரு காட்சிகளின் நிறைவுப் பகுதியிலும் சைவ சித்தாந்த தத்துவப் பொருண்மை சுருக்கமாக குறிப்பிடப்பட்டள்ளது.
- திருமுறைகளின் தாக்கம் வெகுவாக உள்ளது.
- சில காட்சி அமைப்புகளிடையே பல்வேறு ராகம், தாளங்களுடன் கூடியன வாக பாடற்காட்சிகளும் தத்துவ நுட்பச் செறிவுடன் இடம்பெற்றிருக்கிறது.
- இங்குள்ள பாத்திரப் படைப்புகள் யாவும் சைவ சித்தாந்த கருத்தியலுடன் தொடர்புடையனவாகும்.
- நமசிவாயம் என்னும் பாத்திரமே ஆன்மாவாக சித்தரிக்கப்பட்டிருக்கின்றது.
- இந்நாடகப் பிரதியாக்கத்தின் ஊடாக சைவ சித்தாந்தம் கட்டமைக்கும் ஆன்ம இலக்கும் இலக்கினை அடைய விரும்பு பவனின் இயல்பும் தெளிவுபட விளக்கப்பட்டிருக்கின்றது.
- ஊன்றி நோக்குமிடத்து சிவஞான போத எட்டாம் சூத்திர வெண்பாக் கருத்தியலை மிகத் தெளிவாகவும் நுண்ணார்ந்தும் வெளிப்படுத்தும் நாடக வடிவமாக இந்நூலை அணுக முடிகின்றது.
- ‘குருவருள் இன்றித் திருவருள் இல்லை’ என சைவ சித்தாந்தம் இறுதி செய்வதற்கு அமைய சத்குருவழி நின்று ஞான மெய்திய ஆன்மா தன்னைத் தானறிந்து பதிவாகிய தலைவனைச் சேரும் என்பது பெறப்படுகின்றது.
- நமசிவாயம் என்பது இறை நாமம். ஆயினும் ஆன்மா வுக்கு சூட்டப்பட்டு இருப்பதன் காரணம் ‘தன்னைத் தன்னால் அறிதலே’ தலைவராகிய இறைவனை அடைய முடியும் என்பதாலாகும். அந்த ஞானவிசாரமே ஆன்ம விடுதலைக்கு அடிப்படை யாகும். எனவே ஆன்மா தன்னை உணரும் நிலையில் தானே பதிப் பொருள் என்று உணரும். அதுவே நான் யார் அல்லது நமசிவாயம் என்பதாக அமைகின்றது.
- சைவ சித்தாந்த கருத்தியல் தளம் பல்வேறு வடிவங்களில் மக்கள் மயப் படுத்தப்பட முற்பட்ட காலனித்துவ காலச் சூழலில் அக்கருத்தியல் நாடக வடிவமாக்கப்பட்டு மக்கள் வாழ்வியல் நீரோட்டத்தில் கலக்கச் செய்வதற் கான புதிய முயற்சியாக நமசிவாயம் அல்லது நான் யார் எனும் நூல் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பது புலனாகின்றது.
- ஆகவே, ஆன்மாவைப் பற்றி தோகான்ம வாதிகள், சூக்கும தேகான்மவாதிகள், இந்திரிய ஆன்ம வாதிகள், அந்தக்கரனான்ம வாதிகள், ஏகான்மவாதிகள் என ஆன்ம வாதிகள் கட்டமைத்த புனைவுகளுக்கு எதிரான நாடக வடிவமாக இந்த நமசிவாயம் அல்லது நான் யார் அமைந்துள்ளது. இதன் வழி சைவ சித்தாந்தம் பற்றிய இலக்கியப் பதிவுகளில் இன்னும் முக்கியமான இடத்தினைப் பெற்றிருக் கின்றது. பிரிட்டிசார் காலனி ஆதிக்க வரலாற்றுக் காலத்தில் சுதேசிய

*பண்பாட்டுப் படிமலர்ச்சிக்கான செயலூக்கங்களாக அமையும் இலக்கியப் பதிவாக இந்த நமசிவாய அல்லது நான் யார் எனும் ஓர் நவீன நாடகம் எனும் நூல் அமைந்துள்ளது.*

- *சுருங்கக் கூறின் இந்தியாவில் கருக்கொண்டு வளர்ந்து ஈழத்தில் படர்ந்த சைவசித்தாந்த கருத்தியல் பரவலாக்கத்தில் ஈழத்த வரின் இலக்கிய முயற்சிகள் தனித்துவ மானவை. இத்தகைய இலக்கியப் பதிவுகளிடையே வித்து வான் க.இராமலிங்கத்தின் இந்நாடக நூல் சைவ சித்தாந்தப் பரவலாக்கத்தில் ஓர் வரப்பிரசாதமே எனக்கூறலாம்.*

**References**


Kantacāmi, Cō. Na. (2003). *Intiyat Tattuvak Kaḷañciyam: Tokuti-2*. Ceṉṉai: Maṇivācakar Nūlakam. [*கந்தசாமி, சோ. ந. (2003). இந்தியத் தத்துவக் களஞ்சியம்: தொகுதி-2. சென்னை: மணிவாசகர் நூலகம்.*]

Kantaiyā, Mu. (2007). *Caivañāṉa Viḷakkam*. Koḻumpu: Civattiru Maṉṟam. [*கந்தையா, மு. (2007). சைவஞான விளக்கம். கொழும்பு: சிவத்திரு மன்றம்.*]

Mukuntaṉ, Ca. (2008). *Tirumuṟaikaḷil Caivacittānta Cintaṉaikaḷ: Aṭaṅkaṉ Muṟaiyaiyum Tiruvācakat Taiyum Aṭippaṭaiyākak Koṇṭa Nōkku, Pakti Neṟiyum Paṇpāṭṭuk Kōlaṅkaḷum*. Koḻumpu: Intucamaya Kalācāra Aluvalkaḷ Tiṇaikkaḷam. [*முகுந்தன், ச. (2008). திருமுறைகளில் சைவசித்தாந்த சிந்தனைகள்: அடங்கன் முறையையும் திருவாசகத் தையும் அடிப்படையாகக் கொண்ட நோக்கு, பக்தி நெறியும் பண்பாட்டுக் கோலங்களும். கொழும்பு: இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.*]

Mukuntaṉ, Ca. (Pa.Ā.). (2024). *Namacivāyam Allatu Nāṉ Yār Eṉṉum* Ōr *Navīṉa Nāṭakam*. Paḻaiya Māṇavar Caṅkam, Maṭṭuvil: Maṭṭuvil Kamalācaṉi Vittiyālayam. [*முகுந்தன், ச. (ப.ஆ.). (2024). நமசிவாயம் அல்லது நான் யார் என்னும் ஓர் நவீன நாடகம். பழைய மாணவர் சங்கம், மட்டுவில்: மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்.*]

Vēluppiḷḷai, Ā. (1985). *Tamiḻ Ilakkiyattil Kālamum Karuttum: Mūṉṟām Patippu*. Ceṉṉai: Pāriputtakap Paṇṇai. [*வேலுப்பிள்ளை, ஆ. (1985). தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்: மூன்றாம் பதிப்பு. சென்னை: பாரிபுத்தகப் பண்ணை.*]